# மேல் மாகாண சபை

மேல் மாகாணத்தில் அமைந்துள்ள நுண் மற்றும் சிறு அளவிலான தொழில் முனைவோரை விரிவுபடுத்துவதற்காக நடைமுறைப்படுத்தும் சலுகை கடன் உத்தேச திட்டம்-2026

விண்ணப்பம் கோரல்

மேல் மாகாணத்தில் நிறுவப்பட்ட நுண் மற்றும் சிறு அளவிலான தொழில்களை விரிவுபடுத்தும் நோக்கத்துடன், மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருக்கும், வயது 18 இற்கும் மேற்பட்ட நுண் மற்றும் சிறு அளவிலான தொழில் முனைவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கடன் உத்தேச முறை தொடர்பான விபரம் :**

| | |
|---|---|
| ஒரு தொழிலுக்காக வழங்கப்படும் அதிகபட்ச கடன் தொகை | ரூபா 3.0 மில்லியன் |
| ஆண்டு கடன் வட்டி வீதம் | 3% |
| அதிகபட்ச கடன் திருப்பிச் செலுத்தும் கால எல்லை | 84 மாதங்கள் (6 மாத சலுகை காலம் உட்பட) |
| நிதி வசதிகளை வழங்கும் முறை | மக்கள் வங்கி ஊடாக |
| கடன் வழங்கும் பணிகள் | - இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்<br>- தரச் சான்றிதழ்களைப் பெறுதல்<br>- நிறுவனத்திற்குத் தேவையான குறிப்பிட்ட கட்டடங்களைக் கட்டுதல்/மேம்படுத்துதல் |

**முன்னுரிமை வழங்கப்படும் தொழில் துறை**

- விவசாயம் சார்ந்த உற்பத்தி அல்லது பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்
- விலங்கு உற்பத்தி சார்ந்த பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்திகள்
- அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் தொடர்புடைய தொழில்கள்
- சிறிய அளவிலான ஆடை சார்ந்த உற்பத்தி
- சிறிய அளவிலான தோல் சார்ந்த உற்பத்தி
- பாரம்பரிய கைத்தொழில் சார்ந்த உற்பத்தி
- உள்ளூர் மசாலா சார்ந்த பெறுமதி கூட்டப்பட்ட உற்பத்தி
- **அலங்கார பொருட்கள் உற்பத்தி**
- சவர்க்காரம் மற்றும் கழுவும் பொருட்கள் உற்பத்தி
- சீமெந்து சார்ந்த உற்பத்தி
- ஆயுர்வேதம் சார்ந்த உற்பத்தி
- மென் கைத்தொழில்கள்
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி உணவு உற்பத்தி
- உக்காத கழிவு மறுசுழற்சி சார்ந்த தொழில்கள்
- வாகன பழுதுபார்ப்பு சார்ந்த தொழில்கள்
- உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஏற்றுமதி சார்ந்த உற்பத்தி
- உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்காகக் கொண்ட உற்பத்தி தொழில்கள்
- கடன் முகாமைத்துவக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற உற்பத்தி நிறுவனங்கள்

*மொத்த அல்லது சில்லறை வியாபாரங்கள் இந்த உத்தேச கடன் முறைக்கு தகைமையற்றன.

**கடனுக்கு விண்ணப்பிப்பதற்கான அடிப்படைத் தகுதிகள்**

I. தொழில் முனைவோர் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்க வேண்டும்.

II. வயது 18 இற்குமேற்பட்டவராக இருக்க வேண்டும்

III. தொழிலானது பின்வரும் தாபனங்களில் ஒன்றில் பதிவுசெய்யப்பட்டு ஆகக் குறைந்தது ஒரு வருடம் சென்றிருக்க வேண்டும்.

a) கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்

b) மேல் மாகாண வணிகப் பெயர்கள் பதிவுத் திணைக்களம்

c) மேல் மாகாண சபைக்குரிய திணைக்களம் அல்லது அதிகார சபை

d) தேசிய மீன்வள அபிவிருத்தி அதிகாரசபை

e) தொழிலுக்குரியதாக அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டிய வேறு ஏதேனும் அரசு நிறுவனம் அல்லது பகுதி அரசு நிறுவனம்.

IV. தம்மால் தனிமையாக மேற்கொள்ளும்தொழிலொன்று ( சுயதொழிலொன்று) 50 சேவகர்களைவிட குறைவாக சேவையில் ஈடுபடுத்தும் தொழிலொன்றாக வேண்டும்.

V. தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தினால் தொழில் ஊழியசேமலாப நிதியில் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

கடன் வழங்கும் நடைமுறை

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் 2026.07.31 ஆந் திகதிக்கு முன் தொழில் நிறுவப்பட்ட பகுதியில் உள்ள பிரதேச செயலாளரிடம், தான் வசிக்கும் கிராமசேவகரின் ஊடாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்தத் திகதிக்குப் பின் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

  முக்கியம் -தொழில் நிறுவப்பட்ட பிரிவில் நிரந்தர வதிவிடம் இல்லையென்றால், தாம் வசிக்கும் பிரிவின் கிராம அலுவலகரின் ஊடாக பிரதேச செயலாளரால் வசிப்பிடம் உறுதிப்படுத்தி இருக்க வேண்டும்.

- தகைமையுள்ள விண்ணப்பங்கள், தொழில் அமைந்துள்ள பிரிவின் பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் மேல் மாகாணத்தின் பிரதம செயலாளருக்கு அனுப்பப்படும்.

- கிடைக்கப்பெற்ற அனைத்து விண்ணப்பங்களும் மேல் மாகாண சபையின் கடன் முகாமைத்துவக் குழுவால் மதிப்பீடு செய்யப்பட்டு மாகாண சபையின் அளவுகோல்களுக்கு இணங்கும் விண்ணப்பங்கள் காணப்படும் ஒதுக்கீடுகளின் எல்லைகளைக் கருத்தில் கொண்டு , அடுத்த நடவடிக்கைக்காக மக்கள் வங்கியின் தலைமையகத்துக்கு அனுப்பப்படும்.
  முக்கியம். கடன் விண்ணப்பங்கள் தொடர்பாக கடன் முகாமைத்துவக் குழு எடுக்கும் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.(விண்ணப்பதாரரின் முந்தைய கடன் மீள்செலுத்தல் விவரங்கள் கடன் தகவல் பணியகம் (CRIB) மூலம் உறுதிப்படுத்தப்படும்)

- வங்கிக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் வங்கியின் அளவுகோல்களுக்கு ஏற்ப மதிப்பீடு செய்யப்பட்டு, தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு கடன்கள் வழங்கப்படும். வங்கியின் அளவுகோல்களுக்கு இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
  கடன் விண்ணப்பப் படிவம் மற்றும் தொடர்புடைய வழிமுறைகளை மேல் மாகாணத்தின் பிரதம செயலாளரின்,திட்டமிடல் சேவைப் பிரிவின் (http://pla.chiefsec.wp.gov.lk) இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

மேலதிக தகவல்கள் 0112092532 என்ற தொலைபேசி இலக்கத்தை அழைத்து பெறமுடியும் .

கே. ஜீ. பிரதீப் புஷ்ப குமார

பிரதம செயலாளர்
மேல் மாகாணம்
2026.07 .16 ஆந் திகதி